## ஈரோடு முதன்மை மாவட்ட நீதிமன்றம்
## நீதித்துறையில் புதிய பணியிடங்களை தகுதி அடிப்படையில் நிரப்புவதற்கான விளம்பர அறிக்கை.

## விளம்பர அறிக்கை எண்.9/2019 நாள் 07.01.2019.

ஈரோடு மாவட்ட நீதித்துறையில் அடிப்படைப் பணியில் புதிதாக பணியாளர்களை உரிமையியல் நீதிமன்றங்களில் நியமனம் செய்யும் பொருட்டு நேர்முகத் தேர்வு ஈரோடு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. துப்புரவு பணியாளர், சுகாதார ஊழியர், இரவுக் காவலர் மற்றும் மசால்சி பதவிகளுக்கு தகுதி வாய்ந்த நபர்கள் தேர்வு செய்வதற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படியும். அரசாணையின்படியும். அரசாணைக்குட்பட்டு கல்வித்தகுதி, வயது மற்றும் பிற தகுதிகள் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர்கள், கீழ்க்கண்ட இன சுழற்சி முறையில் உள்ளவர்கள் மட்டும் இத்துடன் கண்டுள்ள விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து சாதாரண தபால் மூலம் ஈரோடு, முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களுக்கு 22.01.2019 தேதி மாலை 5.45 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பப்பட வேண்டும். சான்றிதழ்களின் சரிபார்த்தலின் அடிப்படையில் தகுதி தேர்வுக்கு இந்நீதிமன்ற இணையதள வலைதளத்தின் மூலம் அழைக்கப்படுவோர் மட்டும் நேரில் கலந்து கொள்ளவேண்டும்.

**அனைத்து பதவிகளுக்கும் வயது வரம்பு : (01.07.2019 அன்று)**

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இன சுழற்சி வகைகள் | குறைந்தபட்ச வயது | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்கள்), பழங்குடி வகுப்பினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 18 வயது (பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்) | 35 வயதுக்குள் |
| 2 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்/ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | | 32 வயதுக்குள் |
| 3 | ஏனையோர் (அதாவது ஆ.தி, ஆ.தி(அ), ப.வ., மிபிவ, சீ.ம., பி.வ மற்றும் பி.வ.(முஸ்) ஆகிய வகுப்பினை சாராதவர்கள்) | | 30 வயதுக்குள் |

இதர பிரிவினருக்கு வயது வரம்பு சலுகைகள் நடைமுறையிலுள்ள அரசாணைகள் அரசு விதிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்.

**I. பதவியின் பெயர்: துப்புரவு பணியாளர் - காலிப்பணியிடம் - 10**

**1. சம்பள ஏற்ற முறை** New Pay Matrix in Level 1(15700 - 50000)
2. கல்வித்தகுதி : எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
3. காலியிட பகிர்வு (இன சுழற்சிமுறை) (1 முதல் 10) :

| வ. எண் | (இன சுழற்சிமுறை) | (இன சுழற்சி எண்) |
|---|---|---|
| 1 | பொது (முன்னுரிமையுள்ளவர்கள்) | 1 |
| 2 | ஆதிதிராவிடர்(முன்னுரிமையுள்ளவர்கள்) அருந்ததியர் (முன்னுரிமை அடிப்படையில்) - (ஆதரவற்ற விதவை) (பெண்கள்) | 2 |
| 3 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமையுள்ளவர்கள்) | 3 |
| 4 | பிற்படுத்தபட்டோர்(பிற்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையுள்ளவர்கள்) | 4 |
| 5 | பொது (முன்னுரிமையற்றவர்கள்) (ஆதரவற்ற விதவை) (பெண்கள்) | 5 |
| 6 | ஆதிதிராவிடர் (முன்னுரிமையுள்ளவர்கள்) | 6 |
| 7 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்கள்) - (ஆதரவற்ற விதவை) (பெண்கள்) | 7 |
| 8 | பிற்படுத்தபட்டோர்(பிற்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்) - (ஆதரவற்ற விதவை) (பெண்கள்) | 8 |
| 9 | பொது (முன்னுரிமையற்றவர்கள்) | 9 |
| 10 | பிற்படுத்தபட்டோர்(பிற்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்) | 10 |

**II . பதவியின் பெயர் சுகாதாரஊழியர் காலிப்பணியிடங்கள் - 5**

1. **சம்பள ஏற்ற முறை** New Pay Matrix in Level 1(15700 - 50000)
2. கல்வித்தகுதி : எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
3. காலியிட பகிர்வு (இன சுழற்சிமுறை) (7 முதல் 11) :

| வ. எண் | (இன சுழற்சிமுறை) | (இன சுழற்சி எண்) |
|---|---|---|
| 1 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்கள்) (ஆதரவற்ற விதவை) (பெண்கள்) | 7 |
| 2 | பிற்படுத்தபட்டோர்(பிற்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்) - (ஆதரவற்ற விதவை) (பெண்கள்) | 8 |
| 3 | பொது (முன்னுரிமையற்றவர்கள்) | 9 |
| 4 | பிற்படுத்தபட்டோர்(பிற்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்) | 10 |
| 5 | பொது (முன்னுரிமையற்றவர்கள்) | 11 |

**III. பதவியின் பெயர்: இரவுக் காவலர் - காலிப்பணியிடங்கள் - 17**

1. சம்பள ஏற்ற முறை: New Pay Matrix in Level 1(15700 - 50000)
2. கல்வித்தகுதி : எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
3. காலியிட பகிர்வு (இன சுழற்சிமுறை) (12, 15, 23, 26 முதல் 39) :

| வ. எண் | (இன சுழற்சிமுறை) | (இன சுழற்சி எண்) |
|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர் (முன்னுரிமையற்றவர்கள்) (ஆதரவற்ற விதவை) (பெண்கள்) | 12 |
| 2 | பிற்படுத்தபட்டோர் (முஸ்லீம்) (முன்னுரிமையுள்ளவர்கள்) | 15 |
| 3 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்கள்) - (பெண்கள்) (தமிழ்வழிக்கல்வி) | 23 |
| 4 | ஆதிதிராவிடர் (முன்னுரிமையுள்ளவர்கள்) (தமிழ்வழிக்கல்வி) (பெண்கள்) | 26 |
| 5 | பொது (முன்னுரிமையற்றவர்கள்) | 27 |
| 6 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமையுள்ளவர்கள்) | 28 |
| 7 | பொது (முன்னுரிமையற்றவர்கள்) (பெண்கள்) | 29 |
| 8 | பிற்படுத்தபட்டோர்(பிற்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்) (பெண்கள்) | 30 |
| 9 | பொது (முன்னுரிமையற்றவர்கள்) (முன்னாள் இராணுவத்தினர்) (தமிழ்வழிக்கல்வி) | 31 |
| 10 | ஆதிதிராவிடர் அருந்ததியர்(முன்னுரிமையற்றவர்கள்) | 32 |
| 11 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்கள்) | 33 |
| 12 | பிற்படுத்தபட்டோர்(பிற்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்) | 34 |
| 13 | பொது (முன்னுரிமையுள்ளவர்கள்) | 35 |
| 14 | ஆதிதிராவிடர் (முன்னுரிமையுள்ளவர்கள்) | 36 |
| 15 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்கள்) | 37 |
| 16 | பிற்படுத்தபட்டோர்(பிற்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்) (முன்னாள் இராணுவத்தினர்) (தமிழ்வழிக்கல்வி) | 38 |
| 17 | பொது (முன்னுரிமையற்றவர்கள்) (பெண்கள்) | 39 |

**III. பதவியின் பெயர்: மசால்சி - புது பணியிடங்கள் - 2**

1. சம்பள ஏற்ற முறை: New Pay Matrix in Level 1(15700 - 50000)
2. கல்வித்தகுதி : எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
3. காலியிட பகிர்வு (இன சுழற்சிமுறை) (31 மற்றும் 40) :

| வ. எண் | (இன சுழற்சிமுறை) | (இன சுழற்சி எண்) |
|---|---|---|
| 1 | பொது (முன்னுரிமையற்றவர்கள்) (முன்னாள் இராணுவத்தினர்) (தமிழ்வழிக்கல்வி) | 31 |
| 2 | பிற்படுத்தபட்டோர் (முஸ்லீம்) (முன்னுரிமையற்றவர்கள்) (ஆதரவற்ற விதவை) (பெண்கள்) | 40 |

**விண்ணப்பிக்க கடைசி நாள்:**

விண்ணப்பங்கள் (ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு சுயசான்றொப்பத்துடன்) தற்போது பணிபுரியும் விவரங்களுடனும் (ஏதும் இருப்பின்) அனைத்து கல்விச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ் மற்றும் முன்னுரிமைக்கான சான்றிதழ்கள் (ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவை மற்றும் கலப்புத் திருமணம் மற்றும் பிற) மற்றும் பிற சான்றிதழ்களின் நகல்கள் (உரிய சுய சான்றொப்பத்துடன்) இணைக்கப்பட்டு கீழ்காணும் முகவரிக்கு சாதாரண தபாலில் **22.01.2019** தேதி **மாலை 5.45** மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

முதன்மை மாவட்ட நீதிபதி
முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு
(காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது)

மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யவோ முதன்மை மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது.

இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இந்நீதிமன்ற இணையதளமான www.districts.ecourts.gov.in/erode சொல்லப்பட்டுள்ள அறிவுரைகள் பின்பற்றப்படாமல் இருக்கும்பட்சத்தில், பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படும்.

இடம்: ஈரோடு
நாள்: 07.01.2019.

Sd/- (N. உமா மகேஸ்வரி),
முதன்மை மாவட்ட நீதிபதி,
ஈரோடு.

# விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்

| | |
|---|---|
| 1 | விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, சாதாரண தபால் மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பம் செய்தால் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும். தபால் உறையின் மேல் எந்த பதவிக்கு விண்ணப்பம் அனுப்பப்படுகிறது என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும். ஒரே உறையில் ஒன்றுக்கு மேற்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். |
| 2 | பாஸ்போர்ட் அளவு புகைப்படம் விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு சுய சான்றொப்பத்துடனும் (by Self Attestation) விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். புகைப்படத்தை விண்ணப்பத்தில் பின் (Stapler Pin) அடித்து இணைக்கக்கூடாது. |
| 3 | அனைத்து தகவல் பரிமாற்றங்களும் (நேர்காணலுக்கான அழைப்பு/விண்ணப்பம் ஏற்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது) என்ற தகவல் www.districts.ecourts.gov.in/erode என்ற இணையதள வலைதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். வேறு எந்த வகையான முறையிலும் விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட முறையில் தகவல்கள் தெரிவிக்கப்படமாட்டாது. எனவே, விண்ணப்பதாரர்கள் மேற்கூறிய இணையதள வலைதளத்தை தொடர்ந்து கவனித்து தகவல்களை அறிந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. |
| 4 | அனைத்து சான்றாவணங்களின் நகல்கள் மட்டுமே உரிய முறையில் சுய சான்றொப்பமிடடு (by Self Attestation) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படக் கூடாது. அந்த விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். |
| 5 | முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், கையொப்பம் இடப்படாத, உரிய சான்றாவணங்களின் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும். |
| 6 | விண்ணப்பதாரர் தனது இருப்பிட சான்று குறித்து ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வங்கி கணக்கின் முதல் பக்கம், பான் கார்டு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் நகலினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். |
| 7 | முன்னுரிமை கோரும் நேர்வுகளில் முன்னுரிமைக்கான உரிய சான்றிதழ்களின் நகல் இணைக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் அந்த விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும். |
| 8 | காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள்ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. |
| 9 | தமிழ் வழிக் கல்விக்கு என ஒதுக்கப்படும் இன சுழற்சி முறைக்கு தமிழ் வழி கல்வி பற்றிய தகவல்கள் விண்ணப்பத்தில் உரிய இடத்தில் பூர்த்தி செய்திருக்கவேண்டும். |
| 10 | மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ, வேலை வாய்ப்பு அறிவிக்கையை எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யவோ ஈரோடு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. |

# விண்ணப்பப் படிவம்

பாஸ்போர்ட் அளவு
புகைப்படம்
உரிய சுய
சான்றொப்பத்துடன்

................. பதவிக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 | (அ) விண்ணப்பதாரரின் பெயர் (தமிழில்)<br>(சான்றிதழில் உள்ளபடி)<br>(ஆ) Name of the Applicant (in English)<br>(as per the certificates) | : | |
| 2 | தந்தை/ கணவர் பெயர் | : | |
| 3 | பாலினம் (ஆண் / பெண் / இதர) | : | |
| 4 | பிறந்த தேதி | : | |
| 5 | கல்வித் தகுதி<br>(மாற்றுச்சான்றிதழ் நகல் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். கூடுதல் கல்வித் தகுதிக்கு அதற்குரிய கல்விச் சான்றிதழ்களின் நகல் இணைக்கப்பட வேண்டும். | : | |
| 6 | விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் | | |
| 7 | இனப்பிரிவு (சரியானதை ( ✓ ) குறியீடு செய்யவும்) | : | OC \| BC \| BC(M) \| MBC \| SC \| SCA \| ST |
| 8 | ஜாதி (உட்பிரிவுடன்) | : | |
| 9 | தேசிய இனம்/மதம் (Nationality / Religion) | : | |
| 10 | பிறப்பிடம் | : | |
| 11 | திருமணமானவரா | : | |
| 12 | நிரந்தர முகவரி | : | |
| 13 | முன் அனுபவம் ஏதேனும் இருப்பின் சான்றிதழ் இணைக்கவும் | | |
| 14 | முன்னுரிமை கோருகிறீரா? ஆம் எனில் உரியவற்றை தேர்ந்தெடுக்கவும் / ஆம் எனில் உரிய சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்)<br>1. ஆதரவற்ற விதவை<br>2. மாற்றுத் திறனாளி<br>3. முன்னாள் இராணுவ படைவீரர்/சார்ந்தோர்<br>4. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்<br>5. மற்றவை | : | |
| 15 | தமிழ் வழிக்கற்றவரா? (ஆம் எனில் உரிய சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 16 | வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளீரா? (ஆம் எனில் எண்ணைக் குறிப்பிடுக. உரிய ஆவணத்தின் நகல் இணைக்கப்படவேண்டும்) | : | |
| 17 | விண்ணப்பதாரரின் மேல் காவல் துறையில் வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளதா? ஆம் எனில் விபரம் தெரிவிக்கவும். | : | |
| 18 | விண்ணப்பதாரருக்கு யாதொரு நீதிமன்றத்தில் ஏதெனும் வழக்கு நிலுவையில் உள்ளதா? ஆம் எனில் விபரம் தெரிவிக்கவும். | | |
| 19 | இணைக்கப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள் எண்ணிக்கை | : | |
| 20 | ஈரோடு மாவட்டத்தில் நீதித்துறையில் நெருங்கிய உறவினர் யாரேனும் பதவியில் உள்ளனரா? ஆம் எனில் விபரம் குறிப்பிபடவும். | : | |

**இடம்:**

**நாள்:** விண்ணப்பதாரரின் கையொப்பம்